# Indian Polity Notes Part 2 in Tamil

## 2] அரசியலமைப்புச் சட்டம்

அரசியலமைப்புச் சட்டம் என்பது அரசியல் முறைகளின் அடிப்படைக் கோட்பாடுகளுடைய தொகுப்பாகும். இதன் அடிப்படையிலேயே நாட்டு மக்கள் ஆளப்படுகின்றனர்.

**இந்திய அரசியலமைப்புச் சட்டம்**

- அமைச்சரவை தூதுக்குழுவின் பரிந்துரைப்படி, நம் இந்திய நாட்டிற்கான புதிய அரசியலமைப்பினை உருவாக்க இந்தியப் பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் நிர்ணய சபை 1946 ஆண்டில் அமைக்கப்பட்டது.
- 18.07.1947 – ல் இங்கிலாந்து நாடாளுமன்றம் இந்திய சுதந்திரச் சட்டம் 1947 – ஐ இயற்றியது. இச்சட்டத்தின் படி இந்தியா, பாகிஸ்தான் என இரு நாடுகள் உருவாக்கப்பட்டன.
- அனைத்து இறையாண்மை அதிகாரங்களும் இரண்டு நாடுகளின் அரசியல் நிர்ணய சபைக்கு மாற்றப்பட்டது.
- இரு நாடுகளின் அரசியல் நிர்ணய சபை சட்டமன்றமாக செயல்பட்டன.
- பிலிக்கப்படாத இந்தியாவில் இருந்த மத்திய சட்டபட பேரவை இச்சட்டத்தால் ஒழிக்கப்பட்டது
- இந்திய அரசியல் நிர்ணய சபை, சட்டமியற்றும் உயர்ந்த அமைப்பாக, சட்டமன்றனாக செயல்பட்டது.
- 1946 டிசம்பர் 9 – ஆம் நாள் டாக்டர். சச்சிதாநந்த சின்கா தலைமையில் அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்றது.
- 1946 டிசம்பர் 11 – ஆம் நாள் நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில் டாக்டர்.இராஜேந்திர பிரசாத் அரசியல் நிர்ணய சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- அரசியல் நிர்ணய சபை, அரசியலமைப்புச் சட்டமியற்றும் பணியை வரைவு குழுவிற்கு அளித்தது.
- அரசியல் நிர்ணய சபையின் கூட்டம் 1947 ஆகஸ்ட் 14 முதல் 30 வரை நடைபெற்றது.
- அரசியல் நிர்ணய சபையின் செயல்பாடுகள் குறித்த ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழு வழிமையான மய்ய அரசைக் கொண்ட கூட்டாட்சி அரசியலமைப்புக்கு பரிந்துரை செய்தது.
- வரைவுக்குழு நியமிக்கப்பட்டு வரைவு அரசியலமைப்புச் சட்டத்தை தயார் செய்தது. இதன் மீதான பொது விவரம் 1948 – ம் ஆண்டு நவம்பர் 4 முதல் நவம்பர் 9 வரை நடந்தது. விவரங்களை கருத்துகொள்ள 1948 – ம் ஆண்டு நவம்பர் 15 முதல் துவங்கியது.
- வரைவுக்குழு 141 நாட்கள் விவாதித்தது.
- முதல் வரைவு அரசியலமைப்பு 315 சரத்துகளும்,8 அட்டவணைகளும் இருந்தன. பிறகு 386 சரத்துகளாக உயர்த்தப்பட்டது.

- 1947 ஆகஸ்ட் 29 – ஆம் நாள் வரைவுக்குழுவின் தலைவராக டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நியமனம் செய்யப்பட்டார்.
- திறமையாக சட்ட வல்லுநரான டாக்டர். அம்பேத்கர் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் "சிற்பி" ஆவார்.
- சட்ட வரைவுக் குழு, 60 நாடுகளில் அரசியலமைப்புச் சட்டத்தை ஆய்ந்துப்படித்து, அவற்றில் உள்ள தகுதிமிக்க சிறப்புக் கூறுகளை ஏற்றுக் கொண்டது.
- அரசியலமைப்புச் சட்டம் இயற்ற 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 18 நாட்கள் ஆனது.
- 11 திட்டமிட்டக் கூட்டங்களில் அரசியலமைப்புச் சட்டத்தை பற்றி கலந்துரையாட 114 நாட்கள் ஆயிற்று.
- 1929 – ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் மாநாட்டு "பூரண சுயராஜ்யம்" தீர்மானத்தின் படி 1930 – ஆம் ஆண்டு சனவரி 26 ஆம் நாள் முதல் இந்திய சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. அதனை நினைவு கூறும் வகையில் 1950 சனவரி 26 – ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.
- அரசியலமைப்பு நிர்ண சபை 1950 சனவரி 24 – ஆம் நாள் கடைசியாக கூடியது.
- அரசியலமைப்பு சட்டம் அரசியல் நிர்ணய சபையால் 26.11.1949 அன்று ஏற்றுக் கொண்டது.
- 24.011950 அன்று அரசியலமைப்பின் 3 பிரதிகள் நாடாளுமன்ற அவையில் வைக்கப்பட்டது.(1 – ஆம் பிரதி ஆங்கிலத்தில் எழுதப்பட்டது, 2 – ஆம் பிரதி ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டது, 3 – ஆம் பிரதி இந்தியில் எழுதப்பட்டது.)
- அனைத்து பிரதிகளும் சபையின் அனைத்து உறுப்பினர்களால் கையொப்பம் இடப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொண்ட போது, 22 பாகங்களையும், 8 அட்டவணைகளையும், 395 சரத்துக்களையும் கொண்டிருந்தது.
- தற்போது இந்திய அரசியலமைப்பு 25 பாகங்களையும், 12 அட்டவணைகளையும், 462 சரத்துக்களையும் கொண்டுள்ளது.

**அரசியல் வரைவுக்குழு**

- டாக்டர்.பி.ஆர். அம்பேத்கர் (குழுத் தலைவர்)
- என்.கோபால் சுவாமி அய்யங்கார்.
- அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்
- டாக்டர்.கே.எம்.முன்சி.
- சையத் முகமது சாதுல்லா
- பி.எல்.மித்ரா(என். மாதவராவ்)
- டி.டி.கிருஷ்ணமாச்சாரி(டி.பி. கைத்தான்)

**குழுக்கள்**

| குழுக்கள் | குழுத் தலைவர் |
|---|---|
| அடிப்படை உரிமைகள் மற்றும் சிறுபன்மையினர் குழு | வல்லபாய் பாட்டேல் |
| மாகாண அரசியலமைப்பு குழு | வல்லபாய் பட்டேல் |
| மத்திய அதிகார குழு | ஜவஹர்லால் நேரு |
| மத்திய அரசியலமைப்பு குழு | ஜவஹர்லால் நேரு |
| கொடிக் குழு | ஜெ.பி.கிருபளானி |
| நெறிமுறைக் குழு | கே.எம்.முன்சி |
| நடைமுறை விதிக் குழு | இராஜேந்திர பிரசாத் |

**இந்திய அரசியலமைப்பின் தன்மைகள்**

**1. கூட்டாட்சி (கூட்டாட்சி போல்வு):** கூட்டாட்சி என்பது மத்திய அரசும் மாநில அரசுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவது (அதாவது ஒரு நிலப்பரப்பை இரு அரசாங்கங்கள் ஆட்சி செய்வது)

**2. அதிகாரப்பகிர்வு:** அதிகாரப் பகிர்வு என்பது மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

**3. அரசியலமைப்பின் மேலாண்மை:** இந்தியாவில் மிக உயர்ந்தது இந்த சட்டம், இது சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது என்பதை குறிக்கிறது.

**4. எழுதப்பட்ட அரசியலமைப்பு:** அரசியலமைப்புச் சட்டம் இயற்ற ஒரு குழு அமைத்து தனியாக ஒரு ஆவணமாக உள்ளது. நாட்டில் உள்ள அனைத்துச் சட்டங்களும் இதற்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

**5. நீதிமன்றங்களின் அதிகாரம்:** இந்தியாவில் மூன்று அதிகார அமைப்புகாளன சட்டமியற்று துறை, செயல்படு துறை (நிர்வாக துறை) நீதித்துறை ஆகியவற்றில், நீதித்துறையானது மற்ற இரு துறைகளின் செயல்பாடுகளை, அதாவது இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு செயல்படுகிறதா என்று கவனிக்கிறது. இந்திய அரசியலமைப்பு சட்டத்தை மீறி சட்டம் இயற்றப்பட்டாலோ அல்லது செயல்பட்டாலோ அதை செல்லாது என்று அறிவிக்க உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது

**கூட்டாட்சி அரசியலமைப்பில் ஒற்றையாட்சி கூறுகள்**

1. பட்டியல்களில் இயற்றப்படும் சட்டங்களில் மத்திய அரசு சட்டமே செல்லும்.
2. மாநிலங்களவை.
3. தேசிய நலன் கருதி நாடாளுமன்றம் சட்டமியற்ற அதிகாரம் பெற்றுள்ளது.

4. மாநில ஆளுநர் நியமனம்.

5. மத்திய அரசின் உத்திரவுகளுக்கு மாநிலங்கள் கீழ்ப்படுதல்.

6. மத்திய நிதிக் கட்டுப்பாடு

7. மாநில உருவாக்கம், எல்லை மாற்றம், பெயர் மாற்றம் ஆகியவைகள் நாடாளுமன்றத்தில் மட்டும் செய்ய முடியும்.

8. ஒருங்கிணைக்கப்பட்ட நீதிமன்றங்கள்

9. அரசியலமைப்பு சட்டத் திருத்தம்

10. நெருக்கடி நிலைகள்

**இந்திய அரசியலமைப்பின் சிறப்புகள்**

1. உலகின் மிக நீளமான அரசியலமைப்பு.

2. நாடாளுமன்ற முறை அரசாங்கம்.

3. இறையாண்மை / இறைமை வாய்ந்த அரசு

4. மக்களாட்சி நாடு

5. நெகிழ்வற்ற மற்றும் நெகிழ்வுடைய தன்மையின் கலப்பு

6. கூட்டாட்சி போல்வு

7. அடிப்படை உரிமைகள்

8. அடிப்படை கடமைகள்

9. அரசு நெறிமுறைக் கோட்பாடு

10. சுதந்திரமான நீதித்துறை

11. சமயச்சார் பற்ற அரசு / மதச்சார்பின்மை,

12. வயது வந்தோர் வாக்குரிமை

13. ஒற்றைக் குடியுரிமை

**பிற நாடுகளிலிருந்து பெறப்பட்டவைகள்**

**இங்கிலாந்து**

- சட்டம் இயற்றும் முறை
- நாடாளுமன்ற முறை அரசாங்கம்
- கூட்டுப் பொறுப்பு
- ஒற்றை குடியுரிமை
- சட்டத்தின் ஆட்சி
- குடியரசுத் தலைவர் பெயரளவு தலைவர்
- அதிக அதிகாரம் வாய்ந்த கீழ் அவை (மக்களவை)
- அமைச்சரவை மற்றும் அதன் தலைவராக பிரதமர் செயல்படுவது.

**அமெரிக்கா**

- குடியரசுத் தலைவர் பதவி
- குடியரசுத் தலைவர் நிர்வாகத் துறை தலைவராக செயல்படுதல்
- குடியரசுத் தலைவர் முப்படை தலைவராக செயல்படுதல்
- எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டம்
- சுதந்திரமான நீதித்துறை
- நீதி மறு ஆய்வு, நீதிப்புனராய்வு
- அடிப்படை உரிமைகள்
- முகவுரை
- குடியரசு துணைத் தலைவர் மாநிலங்களவையின் பதவி வழித் தலைவராக செயல்படுதல்.
- உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி நீக்கம்.

**கனடா**

- கூட்டாட்சித் தத்துவம்
- வலிமையான மத்திய அரசு
- மத்திய மாநில அரசுகளுக்கிடையான அதிகார பகிர்வு, எஞ்சிய அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது.

**அயர்லாந்து**

- அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்
- குடியரசுத் தலைவர் தேர்தல் முறை

- மாநிலங்களவைக்கு குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்.

**ஜெர்மனி**

- நெருக்கடி காலநிலை மற்றும் இதனால் அடிப்படை உரிமைகள் மீது ஏற்படும் தாக்கம்.

**ஆஸ்திரேலியா**

- பொதுப் பட்டியல் (மத்திய பட்டியல் மற்றும் மாநில பட்டியல், இந்திய அரசுச் சட்டம் 1935 – லிருந்து எடுக்கப்பட்டது)
- வணிகம் வியாபாரம் தொடர்பான வகைமுறைகள்

**இரஷ்யா**

- அடிப்படைக் கடமைகள்

**தென் ஆப்பிரிக்கா**

- அரசியலமைப்புச் சட்டத்திருத்த முறை

**பிரான்ஸ்**

- குடியரசு அரசாங்கம்